Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon

An AIChE Technology Alliance CCPS Center for Chemical Process Safety
aiche.org/ccps

This issue sponsored by
ioMosaic®
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகள் (SIMOPS)

August 2023



படம் 1. வெளியீடு நிகழ்ந்த தளம். பதினைந்து வினாடிகளுக்குப் பிறகு, அந்த அமைப்பு புகை மேகத்தால் சூழப்பட்டது.(Ref CSB report No. 2021-01-I-TN)

5வது மாடியில் இருந்து கீழே விழுந்த தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார், மேலும் இருவர் படுகாயமடைந்தனர். நச்சு தன்மையுள்ள ஹைட்ரஜன் குளோரைடு வாயு வெளியீட்டின் போது தப்பிக்க அவர்கள் சில பைப் லைன் வழியாக இறங்க முயன்றனர். இந்த சம்பவத்திலிருந்து பல படிப்பினைகள் உள்ளன.

இந்த பியகான் ஒன்றில் மட்டும் கவனம் செலுத்துகிறது: ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகள், சில சமயங்களில் SIMOPS எனப்படும்.

காயமடைந்த தொழிலாளர்கள் அனைவரும் பிளாட்ஃபார்மில் இருந்த இன்சுலேட்டிங் குழுவைச் சேர்ந்தவர்கள், அதே நேரத்தில் பைப் பிட்டர் குழுவினர் அருகில் போல்ட்களை பொருத்திக் கொண்டிருந்தனர். பைப்ஃபிட்டர்கள் ஆசிட் சூட்டுடன் கூடிய முழு முக சுவாசக் கவசம் அணிந்திருந்ததால் ஹைட்ரஜன் குளோரைடு வாயு வெளியீட்டில் இருந்து காக்கப்பட்டனர்.

இன்சுலேஷன் வேலைக்கான அனுமதி வழங்கியவர் தேவையான பாதுகாப்பு சாதனங்களை உறுதி செய்ய வில்லை, எனவே அவர்கள் தப்பிக்க உதவும் சுவாசக் கருவிகளை வைத்திருந்தனர் மற்றும் தீ எதிர்ப்பு (FR) ஆடைகளை அணிந்தனர்..

## உங்களுக்கு தெரியுமா?

- ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகள் என்பது , உற்பத்தி, ஒப்பந்தக்காரர்கள், பராமரிப்பு அல்லது இதர தரப்பினர் போன்ற பல குழுக்களால் ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் செய்யும் செயல்பாடுகளைக் குறிக்கிறது.
- சில செயல்பாடுகள், ஆஃப்ஷோர் பிளாட்ஃபார்ம்கள் போன்றவற்றில் ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகள், அடிக்கடி நிகழும் என கருத்தில் கொள்ள வேண்டும்.
- மேற்கோள் காட்டிய சம்பவத்தைப் போலவே, பெரும்பாலான பிராசஸ் யூனிட்டில் ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகளுக்கான வாய்ப்புகள் பெரும்பாலும் நீண்ட பராமரிப்பு பணியின் போது நிகழும்
- ஒரே பகுதியில் பல ஒர்க் பெர்மிட்டை வழங்கும் போது, கருத்தில் கொள்ளக்கூடிய அதிக ஆபத்துகள் உள்ளன.
- ஒரே நேரத்தில் செய்யும் செயல்படுகளாலான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழி, ஒரே பகுதியில் பல செயல்பாடுகளைத் தவிர்க்க பணி அட்டவணையைச் செய்வதேயாகும் .
- SIMOPS ஐத் தவிர்க்க முடியாதபோது, அனுமதி வழங்குபவர்கள் செயல்பாடுகளுக்கிடையேயான மற்றும் பல்வேறு பணிக்குழுக்களுக்கு இடையிலான சாத்தியமான தொடர்புகளை கருத்தில் கொள்ள வேண்டும்,

## உங்களால் என்ன செய்ய முடியும்?

- எரியக்கூடிய பொருட்களை ட்ரைன் செய்தல் மற்றும் வெல்டிங் போன்ற முரண்பட்ட செயல்கள் ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் செய்யப்படாமல் இருக்குமாறு ஒர்க் பெர்மிட் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து பார்த்து வழங்குங்கள்
- ஒரே நேரத்தில் செய்யும் செயல்பாடுகள் நீண்ட பராமரிப்பு பணிக்கு பிறகு ஸ்டார்ட்-டப்பிலும் நிகழும் .யூனிட் சீராக இயங்கும் வரை ஒர்க் பெர்மிட்டை தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள்.
- ஒரே நேரத்தில் நிகழும் செயல்பாடுகளை அங்கீகரித்து, அதனை நிர்வகிப்பதற்கான ஒரு வழி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து ஒர்க் பெர்மிட்டையும் ஓர் இடத்தில குழுவாக சேர்த்து பார்த்து, அந்த செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரியுங்கள்.
- ஒரே பகுதியில் வேலை செய்வது முரண்பட்டதாக இல்லாவிட்டாலும், PPE , தப்பிக்கும் முறை அல்லது பிற தனிப்பட்ட சிக்கல்களைக் கருத்தில் கொண்டு இன்னும் விரிவான அபாய மதிப்பாய்வு தேவைப்படலாம்.
- செயல்முறை உபகரணங்கள் அல்லது பைப் லைனில் எந்த வேலையும் செய்யும்போதும் , கட்டுப்பாட்டுத்தன்மையை இழக்க நேரிடும் சாத்தியத்தை கருத்தில் கொள்ளுங்கள்.
- பல ஒப்பந்ததாரர்கள் சம்பந்தப்பட்ட மற்றொரு சம்பவத்திற்கு மார்ச் 2022 பீக்கனைப் பார்க்கவும். https://www.aiche.org/ccps/resources/process-safety-beacon/archives/2022/march/english

**ஒரே நேரத்தில் செய்யும் வேலைகள் ஒருவரையொருவர் எவ்வாறு பாதிக்கலாம் என்பதைக் கவனியுங்கள்**

©AIChE 2023. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or +1 646-495-1371.